# இலங்கைப் பத்திரிகைப் பேரவை

## ஆண்டு அறிக்கையும் கணக்குகள் அறிக்கையும்

2020, சனவரி 01 - 2020, திசெம்பர் 31 வரை

இலங்கைப் பத்திரிகைப் பேரவை,
இல. 155/15, காசல் வீதி,
கொழும்பு 08.
2020, ஒகஸ்ட் 12.

கௌரவ ஊடகத்துறை அமைச்சர்,
வெகுசன ஊடக அமைச்சு,
இல. 163, கிருலப்பனை,
பொல்ஹென்கொட,
கொழும்பு 05.

கௌரவ அமைச்சர் அவர்களே,

## ஆண்டறிக்கை - 2020

இலங்கைப் பத்திரிகைப் பேரவை சட்டத்தின் பிரிவு 20 இன்படி, 1973 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, இலங்கைப் பத்திரிகைப் பேரவைச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் படி 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நியதிக்கு இணங்க இலங்கைப் பத்திரிகைப் பேரவையின் கீழ்க் குறிப்பிட்ட அறிக்கையை இத்துடன் இணைத்து அனுப்புகின்றேன்.

01. 2020 ஆம் ஆண்டு சனவரி முதலாம் திகதியிலிருந்து திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்குரிய பேரவையின் மீதான அறிக்கையும் கொள்கை நிகழ்ச்சித்திட்டமும்,

02. கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.

03. இக்காலப்பகுதிக்குரிய கணக்கு அறிக்கையின் பிரதி.

தங்கள் உண்மையுள்ள,

மஹிந்த பத்திரன,
தலைவர்.

# இலங்கைப் பத்திரிகைப் பேரவையின் 2020 ஆம் ஆண்டின் வருடாந்த அறிக்கை

**இலங்கைப் பத்திரிகைப் பேரவை**

1973 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க சட்டத்தினால் அமைக்கப்பட்ட இலங்கைப் பத்திரிகைப் பேரவை நாடாளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் ஊடகத்துறை அமைச்சின் கீழ் இயங்கும் நியதிச்சபையாகும்.

இலங்கைப் பத்திரிகைப் பேரவையின் நோக்கம்:-

1. இலங்கைப் பத்திரிகை சுதந்திரத்தை உறுதி செய்தல்;
2. இச்சுதந்திரத்தை தவறாக பயன்படுத்துவதை தவிர்த்தல்;
3. உண்மையான தகவல்களை பொதுமக்கள் அறிந்து கொள்வதற்கான உரிமையைப் பயன்படுத்தல்.

01.01.2012 ஆம் ஆண்டு தொடக்கம் இல. 155/15, காசல் வீதி, பொரளை எனும் இடத்தில் அமைந்துள்ளது.

## 1. பேரவையின் அமைப்பு

நீதிமன்றத்தின் பகுதியாக அலுவல்களை மேற்கொள்ளும் இலங்கைப் பத்திரிகைப் பேரவையானது ஏழு (07) உறுப்பினர் களை கொண்டதாகும். ஒருவர் புதினப் பத்திரிகையாளர் சங்கத்தால் நியமிக்கப்படுகிறார் மற்றவர் தொழிலிலீடுபட்டுள்ள பத்திரிகை எழுத்தாளர்களை பிரதிநிதித்துவப்படுத்த நியமிக்கப்படுகிறார். இந்த ஏழு உறுப்பினர்களில் அரசாங்க தகவல் திணைக்களத்தின் இயக்குனர் முன்னாள் அலுவலக உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார். உறுப்பினர்கள் நியமிக்கப்பட்ட திகதியிலிருந்து மூன்று வருட காலத்திற்கு உறுப்பினர்களாக நியமிக்கப்படுகிறார்கள். ஆணையாளர் குழுவின் தலைமை நிர்வாக அதிகாரியாக செயற்படுவார்.

அதிமேதகு சனாதிபதியால் 08.01.2020 அன்று நியமிக்கப்பட்ட தலைவர் மற்றும் உறுப்பினர்களின் பெயர்கள் கீழே குறிப்பிட்டுள்ளது.

| பதவி | பெயர் | நியமிக்கப்பட்ட திகதி |
|---|---|---|
| தலைவர் | சிரேஸ்ட விரிவுரையாளர் மஹிந்த பத்திரன | 08.01.2020 |
| உறுப்பினர் | திரு. நாலக்க களுவேவ பணிப்பாளர் நாயகம் (தகவல் திணைக்களம்) | 22.01.2021 |
| உறுப்பினர் | காமினி விஜேயவர்தன சட்டத்தரணி | 22.01.2021 |
| உறுப்பினர் | பிரசந்த லால் டி அல்விஸ் சனாதிபதி ஆலோசகர் | 22.01.2021 |
| உறுப்பினர் | கலாநிதி. ரியூடர் வீரசிங்க | 22.01.2021 |

திரு. ஆரியநந்த தொம்பஹாவத்த இயக்குனர் சபை உறுப்பினராக 07.07.2020 அன்று நியமிக்கப்பட்டார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் திரு. கே. எம். ஜி. எஸ் நாலக்க கலுவேவா 06.07.2020 அன்றிலிருந்து 05.08.2020 வரை பேரவையின் பதில் தலைவராக நியமிக்கப்பட்டிருந்தார்.

திரு. எம். கே. ஜி. சி. பி. பண்டார இயக்குனர் சபை உறுப்பினராக 17.09.2020 அன்று நியமிக்கப்பட்டார்.

## 2. பேரவையின் கூட்டங்கள்

தலைவர் மற்றும் உறுப்பினர்கள் முன்னிலையில் 15 கூட்டங்கள் பேரவையில் 2020ஆம் ஆண்டு நடாத்தப்பட்டுள்ளது.

## 03. ஆளணியினர்

தேசிய ஊதிய மற்றும் பணியாளர்கள் ஆணையக அரசியலமைப்பின் புதிய ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு ஏற்ப பணியாளர்கள் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

தற்போது இலங்கைப் பத்திரிகைப் பேரவையில் பதிவு செய்யப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கை. 19

| | | |
|---|---|---|
| 1. | திரு. ரி. நிரோசன | ஆணையாளர் |
| 2. | திரு. வை.எல்.டி.எ.எம். விஜேயசிங்க | பதில் ஆணையாளர் |
| 3. | திரு. எம்.பி.குஸான் தேவபிரிய | கணக்காளர் |
| 4. | திருமதி கே.ஜீ.என்.எச் பத்திரன | நிர்வாக அலுவலர் |
| 5. | திருமதி எச்.எஸ். விஜயரட்ண | செய்தி புலனாய்வாளர் (சிங்களம்) |
| 6. | திருமதி வினுஸி சிசகலா | மொழி பெயர்ப்பாளர் |
| 7. | செல்வி ஸாலினி. எ.யோ. யோகராஜா | செய்தி புலனாய்வாளர் (தமிழ்) |
| 8. | திருமதி அனோமா பிரியந்தி திலகரட்ண | முகாமைத்துவ உதவியாளர் |
| 9. | திருமதி ரி.என். நில்மினி பீரீஸ் | கணக்கு உதவியாளர் |
| 10. | திருமதி பீ.எம்.பீ.கே சிறீவர்த்தன | முகாமைத்துவ உதவியாளர் |
| 11. | திருமதி என்.ஜே.ஏ.ஜே.ஜீ பெரேரா | முகாமைத்துவ உதவியாளர் |
| 12. | திருமதி ஏ.எஸ். நிரஞ்சி | முகாமைத்துவ உதவியாளர் |
| 13. | திரு. கே.எல் சந்திரபால | சாரதி |
| 14. | திரு. ஜி.பி. கருணாத்திலக்க | சாரதி |
| 15. | திரு. கே.ஜி.எப் விஜயரட்ண | அலுவலக உதவியாளர் |
| 16. | திரு. எச்.எஸ்.எஸ் ஆனந்த | தூதுவர் |
| 17. | திரு. இசுரு தனஞ்சய கருணாதிலக்க | அலுவலக உதவியாளர் |
| 18. | செல்வி. கே.ஜி. திலானி. எம். பண்டார | செய்தி புலனாய்வாளர் (ஆங்கிலம்) |
| 19. | செல்வி வை.பி. சமால்கா | சுருக்கெழுத்தாளர் (ஆங்கிலம்) |

## 04. முறைப்பாடுகள்

2019 ஆம் ஆண்டு 81 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

62 முறைப்பாடுகள் 2013, 2014, 2015, 2016, 2017 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டு முன்வைக்கப்பட்ட நிலையில் 2020ஆம் ஆண்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன.

| | | |
|---|---|---|
| 2013 ஆம் ஆண்டிற்கு முன்னரான முறைப்பாடுகளின் எண்ணிக்கை | 01 | |
| 2014 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பெற்றுக் கொள்ளப்பட்ட முறைப்பாடுகள் | 02 | |
| 2015 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பெற்றுக் கொள்ளப்பட்ட முறைப்பாடுகள் | 01 | |
| 2016 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பெற்றுக் கொள்ளப்பட்ட முறைப்பாடுகள் | 04 | |
| 2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பெற்றுக் கொள்ளப்பட்ட முறைப்பாடுகள் | 04 | |
| 2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பெற்றுக் கொள்ளப்பட்ட முறைப்பாடுகள் | 19 | |
| 2019 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பெற்றுக் கொள்ளப்பட்ட முறைப்பாடுகள் | 42 | |
| | | 62 |
| 2020 ஆம் ஆண்டு ஆய்வு செய்யப்பட்ட மொத்த முறைப்பாடுகள் | | 71 |
| | | 133 |

ஆய்வு செய்யப்பட்ட மொத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை 133. மேற்படி முறைப்பாடுகளுக்கு பேரவை எடுத்த தீர்மானங்கள்

| | | |
|---|---|---|
| 1. | ஆய்வுக்குட்படுத்தப்பட்டவை | 69 |
| 2. | பரஸ்பர இணக்கப்பட்டவை | 08 |
| 3. | தள்ளுபடி செய்யப்பட்டவை | 35 |
| 4. | மீளப் பெறப்பட்டவை | 17 |
| 5. | கட்டளையிடப்பட்டவை | 04 |
| | | 133 |

பின்வரும் அளவு கோள்களை கொண்டு நடவடிக்கை அவசியமற்றது என வகைப்படுத்தப்பட்டவை

| | | |
|---|---|---|
| 1. | முறைப்பாடுகளுடைய கோரிக்கை | 04 |
| 2. | முறைப்பாடானது பத்திரிகை பேரவையின் சட்டத்திற்கு உட்படாதது | 12 |
| 3. | நடைபெற்றது | 01 |
| 4. | முறைப்பாடுகள் முறையாக சமர்ப்பிக்கப்படாதவை | 18 |
| | | 35 |

மேலும், ஈதலய சஞ்சிகை குறித்து 2013 ஆம் ஆண்டு 1 முறைப்பாடும், 2014 ஆம் ஆண்டு 2 முறைப்பாடுகளும் 2015 ஆம் ஆண்டு 1 முறைப்பாடும், 2016 ஆம் ஆண்டு 3 முறைப்பாடுகளும், 2017 ஆம் ஆண்டு 1 முறைப்பாடும் 2018 ஆம் ஆண்டு 2 முறைபாடுகளுமாக மொத்தமாக 11 முறைப்பாடுகள் பேரவைக்கு கிடைக்கப் பெற்றிருந்தன.

அதன்படி, குற்றவியல் விசாரணைப் பிரிவு பல சந்தரப்பங்களில் குறித்த சஞ்சிகையின் முகவரியைப் பெற்றுள்ளது. பல சந்தர்ப்பங்களில் குறித்த சஞ்சிகையின் முகவரி மாற்றப்பட்டு வருவதால் ஈதலய சஞ்சிகைக்கு எதிரான முறைப்பாடுகள் நீதித்துறை அமுலாக்கத்தின் கீழ் முன்வைக்கப்பட்டுள்ளன.

எனவே மேற்குறிப்பிட்ட 11 முறைப்பாடுகள் தொடர்பாக மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் சமர்பித்த பின்னர் எதிர்கால நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்ற மூலங்கள்

1. தனிநபர்கள்
2. நிறுவனத் தலைவர்கள் மற்றும் அமைச்சர்களின் செயலாளர்கள்
3. விரிவுரையாளர்கள்
4. வைத்திய அதிகாரிகள் ஏனைய வல்லுனர்கள்
5. மத குருமார்கள்
6. பாடசாலை ஆசிரியர்கள்
7. தொழிற்சங்கங்கள்
8. அரசியல் கட்சியின் தலைவர்கள் மற்றும் குழுக்கள்

2020 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட 71 முறைப்பாடுகள் பின்வரும் பத்திரிகை உரிமையாளர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டதாகும்.

உரிமையாளரின் பெயர்கள் :-

1. அசோசியேற்றட் நியூஸ் பேப்பர் ஒப் சிலோன் லிமிற்றட்
2. உபாலி நியூஸ் பேப்பர் லிமிடெட்
3. விஜய நியூஸ் பேப்பர் லிமிடெட்
4. றிவிர நியூஸ் பேப்பர் லிமிடெட்
5. "ராவய" பப்லிகேஷன் கிரான்ட் லிமிடெட்,
6. "ஈதலய" நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட்
7. லிபேட்டி பப்ளிசர் பிறைவேட் லிமிற்றற்
8. சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் தனியார் நிறுவனம்
9. "லங்கா இரிதா சங்கிரஹாய" பத்திரிகை நிறுவனம்
10. "உதயன்" பிறைவேற் லிமிடெட்

**பதிவு செய்யப்பட்ட பத்திரிகைகள்**

2020 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 192 பத்திரிகைகள் இலங்கைப் பத்திரிகைப் பேரவையில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

**05. அமைச்சினால் இலங்கைப் பத்திரிகைப் பேரவைக்கு வழங்கப்பட்ட பணிப்புக்கள்**

மீளாய்வின் கீழான ஆண்டில் நாடாளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் மக்கள் தொடர்பாடல் அமைச்சினால் எந்தவித பணிப்புக்களும் வழங்கப்படவில்லை.

## 06. ஊடகவியலாளர்களுக்கான விழிப்புணர்வு செயற்திட்டங்கள்

2020 ஆம் ஆண்டிற்கான பிராந்திய பயிற்சிப் பட்டறைகள் பாடசாலை பயிற்சிப் பட்டறைகள் மற்றும் செயலமர்வுகள், திசெம்பர் மாதம் வரையில் இடம் பெற்ற நிகழ்வுகள் பின்வருமாறு. எனினும் நாட்டில் நிலவும் கொவிட் தொற்று நோய் காரணமாக எதிர்பார்த்த எண்ணிக்கையிலான நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்ய முடியவில்லை.

| திகதி | பட்டறை | இல. | இடம் |
|---|---|---|---|
| 07.02.2020 | ஹலகிற்றியாவ மத்திய கல்லூரி மாணவர்களுக்கான பயிற்சிப் பட்டறை | 23 | இலங்கைப் பத்திரிகைப் பேரவை |
| 14.02.2020 | மத்திய மாகாண ஆசிரியர்களுக்கான பயிற்சிப்பட்டறை | 67 | கல்விஅபிவிருத்தி நிலையம் |
| 27.02.2020 | பானந்துறை வலய பாடசாலை மாணவர்களுக்கான பயிற்சிப்பட்டறை | 558 | பானந்துறை பாலிக கல்லூரி |
| 25.09.2020 | ஆசிரியர்களுக்கான பயிற்சிப் பட்டறை | | “ஓக் ரே” நிலையம் |
| 21.12.2020 | ஊடகவியலாளர்களின் பிள்ளைகளுக்கான பாடசாலை பொதி வழங்கும் நிகழ்வு | | இலங்கை மன்றக் கல்லூரி |

**இதழியல் மற்றும் ஊடகக்கற்கைகள் - 2020**

41 டிப்ளோமா பட்டதாரிகளின் பாட அறிவை மேம்படுத்தும் நோக்கில் கல்வியியல் டிப்ளோமா கற்கைநெறிகள் ஆரம்பிக்கப்பட்டன.

**சான்றிதழ் இதழியல் கற்கைநெறி – 2020**

22 விண்ணப்பதாரர்களுக்கு இதழியல் தொடர்டபான அறிவை மேம்படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்ட சான்றிதழ் பாடத்தின் இறுதித் தேர்வு 16.08.2020 அன்று நடாத்தப்பட்டது.

ஒவ்வொரு செவ்வாய்க்கிழமை பிற்பகல் சமகால முக்கியமான வெளியீடுகள் தொடர்பான கலந்துரையாடல் நிகழ்வு இடம்பெற்றது. அந்த வகையில் ஆண்டுக்கு எட்டு கலந்துரையாடல் நிகழ்வுகள் இடம்பெற்றன.

## 07. நிதி

1. 2020 ஆம் ஆண்டின் இலங்கைப் பத்திரிகைப் பேரவையின் செலவாக ரூபா 32,500,000.00 ஆக மதிப்பிடப்பட்டது. திறைசேரியிலிருந்து மீண்டுவரும் செலவாக 30,796,000.00 ரூபா மாதாந்த தவணை முறையில் பெறப்பட்டது.
2. 2020 ஆம் ஆண்டின் மூலதனச் செலவாக ரூபா 1,000,000 திறைசேரியிலிருந்து ஒதுக்கப்பட்டதுடன், இந்த தொகை மூலதன செலவாக சபைக்கு பெறப்பட்டது.
3. 2018 ஆம் ஆண்டில் அரசாங்க கொடைகள் மற்றும் பத்திரிகை பதிவுக் கட்டணத்திற்கு புறம்பாக, ஏனைய பேரவையின் வைப்பில் இடம்பெற்றவற்றின் விபரங்கள் பின்வருமாறு,

| | ரூபா |
|---|---|
| மீளப்பெறும் அளவீடுகளும் ஏனைய அறவீடுகளும் | 807,301.61 |
| பிந்திய பதிவுக் கட்டண வருமானம் | 162,600.00 |
| | 969,901.61 |

**செயல் பெறுபேற்று அறிக்கை**

மீண்டுவரும் செலவாக அரச மாணியம் உட்பட வருடத்தின் முழு வருமானம் ரூ. 34,994,449.09 வருமானத்திலும் மேலதிக செலவு 31,021,388.76 ரூபா 2020 ஆம் ஆண்டில் ரூபா 3,973,060.33 பேரவை நிதிக்கு வரவிலிடப்பட்டுள்ளது.

**பேரவையின் திரட்டிய நிதி**

2020 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் சபையின் நிதியத்தில் வைப்பிலிருந்த தொகை 6,983,628.30 ரூபா ஆண்டிற்கான முதன்மை நிதி ரூபா 2,492,117.27 ஆண்டின் மூலதன நிதி ரூபா 1,000,000 இந்த ஆண்டிற்கான மூலதன கடனுதவி ரூபா 2,653,547.48 வருடத்திற்கான மூலதன நிதியின் இருப்பு 838,569.79 மூலதன நிதியத்தின் மிகுதியாக ரூபா 3,973,060.33 பதிவாகியுள்ளதுடன் முதல் வருடத்தின் நிதியுடன் சரிசெய்யப்பட்ட தொகையான ரூபா 314,964.50 பேரவையின் நிதிக்கு மாற்றப்பட்டது. ஆண்டின் இறுதியில் ரூ. 19,126,742.64 நிதி காணப்பட்டது.

பேரவையால் திரட்டப்பட்ட நிதியின் இருப்பு, மூலதன இருப்பு, ஊழியர், பணியாளர் நலன்களின் இருப்பாக ரூபா 4,794,642.50 மற்றும் தற்போதைய கடன்கள் மற்றும் மொத்த பொறுப்புக்கள் உட்பட ரூபா 871,733.92 உம், தற்போதைய அல்லாத சொத்துக்கள் ரூபா 8,396,301.35 ஆராய்ச்சி, கடன்நிதி மற்றும் ஏனைய வைப்புக்கள் ரூபா 5,349,836.91 மற்றும் தற்போதைய சொத்துக்கள் ரூபா 11,046,980.80.

**பத்திரிகை பதிவு செய்தல்**

2020, சனவரி மாதம் தொடக்கம் திசெம்பர் வரை ரூபா. 575,000 பத்திரிகை பதிவு மூலம் கிடைக்கப்பெற்றுள்ளது.

**நன்றி நவிலல்**

மக்கள் தொடர்பாடல் மற்றும் தகவல் அமைச்சினால் கிடைக்கப்பெற்ற சரியான அறிவுறுத்தல் மற்றும் வழிகாட்டல் மூலமாக வேலைத் திட்டங்களை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு இலங்கை பத்திரிகை பேரவையின் ஊழியர் குழாமின் கூட்டு ஒத்துழைப்பை பெற முடிந்தமையையிட்டு மகிழ்ச்சி அடைகின்றேன்.

மஹிந்த பத்ரன,
சிரேஸ்ட விரிவுரையாளர்,
தலைவர்.

இலங்கை பத்திரிகை பேரவை,
இல. 155/15, காசல் வீதி,
கொழும்பு 08.

**இலங்கை பத்திரிகைப் பேரவை**

**ஆண்டு அறிக்கையும் கணக்குகள் அறிக்கையும்**

**2020, திசெம்பர் 31 இல் முடிவடையும் ஆண்டறிக்கை**

| சகல தொகையும் இலங்கை ரூபாவில் உள்ளது | குறிப்பு | 2020 | 2019 |
|---|---|---|---|
| **வருமானம்** | | | |
| இலங்கை அரசின் பங்களிப்பு | 3 | 30,796,000.00 | 30,599,000.00 |
| பத்திரிகை பதிவுக்கான கட்டணம் | | 575,000.00 | 439,000.00 |
| பிரதி செய்யக் கட்டணம் | | 320.00 | 4,138.00 |
| பிந்திய கட்டணம் | | 162,600.00 | 81,500.00 |
| இதர வரவுகள் வருமானம் | 4 | 2,653,547.48 | 2,577,148.42 |
| புத்தக விற்பனை | 5 | 14,768.44 | 108,653.67 |
| டிப்ளோமா பாடநெறி வருமானம் | | 540,000.00 | 783,000.00 |
| உத்தியோகஸ்தர்களின் கடன் வட்டி | | 75,629.42 | 89,729.95 |
| சேமிப்பு கணக்கின் வட்டி | | 206,120.63 | 206,279.96 |
| **மொத்த வருமானம்** | | **35,023,985.97** | **34,671,142.66** |
| **செலவுகள்** | | | |
| வேதனம் சம்பளம் மற்றும் ஊழியர் சலுகைகள் | 6 | 15,017,868.65 | 14,345,792.81 |
| விநியோக மற்றும் நுகர்வோர் பாவனை | 7 | 1,219,696.79 | 1,697,207.47 |
| சொத்து தேய்மானம் மற்றும் உபகரண பயன்பாடு | | 2,986,381.61 | 2,377,238.33 |
| செலவு பயன்பாடு | 8 | 5,475,651.61 | 5,419,121.7 |
| ஏனைய செலவுகள் | 9 | 3,831,271.01 | 5,103,225.2 |
| மானியம் மற்றும் கொடுப்பனவு | 10 | 2,490,519.09 | 4,240,940.26 |
| **மொத்த செலவுகள்** | | **31,021,388.76** | **33,183,525.77** |
| **மிகை(பற்றாக்குறை) வரிக்கு முன்னர்** | | **3,973,060.33** | **1,487,616.89** |
| வருமான வரி செலவு | | | |
| **வருடத்திற்கான மிகை/ பற்றாக்குறை** | | **3,973,060.33** | **1,487,616.89** |

**இலங்கை பத்திரிகைப் பேரவை**
**நிதிநிலை அறிக்கை**
**2020, திசெம்பர் 31 இல் முடிவடையும் ஆண்டறிக்கை**

| (சகல தொகையும் இலங்கை ரூபாவில் உள்ளது) | குறிப்பு | 2020 | 2019 |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| **நடைமுறைச்சொத்துக்கள்** | | | |
| நிதி மற்றும் நிதி சமநிலை | 11 | 6,308,138.62 | 2,716,484.19 |
| பெறப்பட்ட வருமானம் | 12 | 195,870.00 | 68,675.70 |
| இறுதி இருப்புக்கள் | 13 | 628,887.01 | 861,978.61 |
| வைப்புக்கள் மற்றும் முற்கொடுப்பனவுகள் | 14 | 1,093,783.42 | 1,167,767.48 |
| கிடைக்கப்பெற்ற இடர் உதவிக்கடன் | 15 | 2,820,301.75 | 2,214,070.70 |
| | | **11,046,980.80** | **7,028,976.68** |
| **நடைமுறைச்சொத்து அல்லாதது** | | | |
| சொத்து உபகரணம் | 16 | 8,396,301.35 | 8,865,314.74 |
| மூதலீட்டு சேமிப்பு கணக்கு (நிதி நோக்கம்) | 17 | 5,349,836.91 | 5,670,710.41 |
| | | **13,746,138.26** | **14,536,025.15** |
| **மொத்த சொத்துக்கள்** | | **24,793,119.06** | **21,565,001.83** |
| **பொறுப்புக்கள்** | | | |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | |
| சில்லறை செய்மதியாளர் | | 7,000.00 | 28,000.00 |
| உள்ளபடி செலவுகள் | 18 | 864,733.92 | 2,250,203.76 |
| | | **871,733.92** | **2,278,203.76** |
| **நடைமுறையற்ற பொறுப்புக்கள்** | | | |
| ஊழியர் நலன் | 19 | 4,794,642.50 | 4,098,760.50 |
| மூலதன ஒதுக்கல் திறைசேரி மூலதனம் | | 838,569.79 | 2,492,117.27 |
| | | **5,633,212.29** | **6,590,877.77** |
| **மொத்த பொறுப்புக்கள்** | | **6,504,946.21** | **8,869,081.53** |
| **தேறிய சொத்து** | | **18,288,172.85** | **12,695,920.30** |
| **தேறிய சொத்து/சமநிலை** | | | |
| திரட்டிய மிகை | | 4,115,000.00 | 4,115,000.00 |
| மீள் மதிப்பு ஒதுக்கீடு | | 1,934,156.72 | - |
| திரட்டப்பட்ட தொகை/(குறைபாடுகள்) | | 12,239,016.13 | 8,580,920.30 |
| | | **18,288,172.85** | **12,695,920.30** |

இல.06 தொடக்கம் 17ஆம் பக்கம் வரை காட்டப்பட்டுள்ள கணக்கீட்டு கொள்கை மற்றும் குறிப்பு இந்நிதி விபரத்தில் அவசியமான பகுதியாகும். இந்நிதி விபரம் அரச பொது கணக்கீட்டு கட்டளைகள் நிறுவனத்திற்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளது.

................................
**கணக்காளர்**

................................
**உதவிக் கணக்காளர்**
இலங்கை பத்திரிகை பேரவை

இந்த நிதிநிலை அறிக்கையை தயார்ப்படுத்துவதற்கு பொறுப்பானவர்களாக பேரவையின் ஆளுநர்கள் மற்றும் பேரவையினுடைய பணிப்பாளர்கள் காணப்படுகின்றனர். பணிப்பாளர் சபைக்கு பதிலாக பேரவை ஆளுநர்கள் கையொப்பம் இட்டுள்ளனர்.

.................................
**ஆணையாளர்**
இலங்கை பத்திரிகை பேரவை

.................................
இயக்குநர் குழுவின் உறுப்பினர்

.................................
இயக்குநர் குழுவின் உறுப்பினர்

...............................
**தலைவர்**
இலங்கை பத்திரிகை பேரவை
2021, பெப்புருவரி 23.

இலங்கை பத்திரிகைப் பேரவை

ஆண்டு அறிக்கையும் கணக்குகள் அறிக்கையும்

2020, திசெம்பர் 31 இல் முடிவடையும் ஆண்டறிக்கை

சகல தொகையும் இலங்கை ரூபாவில் உள்ளது

| | மூலதனப் பங்களிப்பு | மூலதன ஒதுக்கல் | மீள்மதிப்பு | திரட்டபட்ட மிகை பற்றாக்குறை | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|
| 31 திசெம்பர் 2018 வரை மீதி | 3,661,626.75 | 4,115,000.00 | - | | 7,727,275.49 | | 15,503,902.24 |
| கணக்கீட்டுக்கொள்கை மற்றும் திருத்தம் ( குறிப்பு அ) | - | - | - | - | (633,972.08) | - | (633,972.08) |
| திறைசேரியிலிருந்து கிடைக்கப்பெற்ற நிதி | 1,700,000.00 | - | - | - | - | | 1,700,000.00 |
| மூலதனத்திற்கான மாற்றம் | - | - | - | - | - | - | - |
| மூலதன மானியத்தில் வரவு வைக்கப்பட்டது(கடன் தீர்ப்பனவிற்காக) | (2,869,509.48) | - | - | - | - | | (2,869,509.48) |
| வருடத்திற்கான மிகை( பற்றாக்குறை) | - | - | - | - | 1,487,616.89 | | 1,487,616.89 |
| | 2,492,117.27 | 4,115,000.00 | - | | 8,580,920.30 | | 15,188,037.57 |
| 2019, திசெம்பர் 31 ஆந் திகதியன்று மீதி | - | - | - | - | (314,964.50) | | (314,964.50) |
| கணக்கீட்டுக்கொள்கை மற்றும் திருத்தம் ( குறிப்பு ஆ) | 1,000,000.00 | - | - | - | - | | 1,000,000.00 |
| திறைசேரியிலிருந்து கிடைக்கப்பெற்ற நிதி | - | - | 1,934,156.72 | | - | | 1,934,156.72 |
| மூலதனத்திற்கான மானியத்தில் குறைக்கப்பட்டது. | (2,653,547.48) | | - | - | - | | (2,653,547.48) |
| கடந்த ஆண்டில் குறைக்கப்பட்ட மூலதன மானியம் | | | | | 3,973,060.33 | | 3,973,060.33 |
| 2020 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியன்று மீதி | 838,569.79 | 4,115,000.00 | 1,934,156.72 | - | 12,239,016.13 | - | 19,126,742.64 |

**இலங்கை பத்திரிகைப் பேரவை**

**மாற்றப்பட்ட தேறிய சொத்து தொகையின் அறிக்கை**

**2020, திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கானது**

**சகல தொகையும் இலங்கை ரூபாவில் உள்ளது.**

**குறிப்பு அ கணக்கீட்டு கொள்கை மாற்றம் தவறை திருத்தல்**

| | |
|---|---|
| பத்திரிகை பதிவு வருமானம் 2017-2018 | 82,000.00 |
| தகவல் அறியும் சட்டத்தின் கட்டணம் | 14.00 |
| பேரவை தலைவரின் தொலைபேசிக் கட்டணம் | (4,545.89) |
| 2018 கணக்காளர் சம்பளம்(பதில்) | (10,540.25) |
| ஏற்பாட்டின் கீழ் - தணிக்கை கட்டணம் | (1,517,364.00) |
| ஊடக அகராதி செலவு | 366,953.00 |
| மாத்ய சமீக்ஜா மீள் பிரதி - 500 | 157,150.00 |
| கடனளிப்பின் கீழ் மூலதன மானியத்தை சரி செய்தல் | 292,361.06 |
| | **(633,972.08)** |

**குறிப்பு ஆ கணக்கீட்டு கொள்கை மாற்றம் தவறை திருத்துதல்**

| | |
|---|---|
| பத்திரிகை பதிவு வருமானம் 2019-2020 | 8,000.00 |
| பத்திரிகை விற்பனை | 3,952.50 |
| சேவை ஒப்பந்த கட்டணங்கள் | 55,000.00 |
| ஏற்பாட்டின் கீழ் - தணிக்கை கட்டணம் | (117,570.00) |
| தேய்மானம் - அலுவலக, நலன்புரி உபகரணங்களுக்கான ஆரம்ப இருப்புத்திருத்தம் | (3,272.91) |
| தேய்மானம் - அலுவலக, தளபாட மற்றும் பொருத்துதலுக்கான ஆரம்ப இருப்புத்திருத்தம் | (98,779.09) |
| தேய்மானம் - வாகனங்களுக்கான ஆரம்ப இருப்புத்திருத்தம் | (162,000.00) |
| தேய்மானம் நூலக புத்தகங்களுக்கான ஆரம்ப இருப்பு திருத்தம் | (300.00) |
| புத்தக பங்குக்கான ஆரம்ப இருப்பிற்கான திருத்தம் | 5.00 |
| | **(314,964.50)** |

**இலங்கை பத்திரிகைப் பேரவை**

**மாற்றப்பட்ட தேறிய சொத்து தொகையின் அறிக்கை**

**2020, திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கானது**

| சகல தொகையும் இலங்கை ரூபாவில் உள்ளது. | **குறிப்பு** | 2020 | 2019 |
|---|---|---|---|
| **அறிக்கை** | | | |
| வருடத்திற்கான மிகை (பற்றாக்குறை) | | 3,973,060.33 | 1,487,616.89 |
| **செம்மையாக்கல்** | | | |
| பெறுமானத்தேய்வு | | 2,986,381.61 | 2,377,238.33 |
| எழுதி நீக்கல் | | 12,776.50 | 9,495.41 |
| முன்னைய ஆண்டின் செம்மையாக்கல் | | (314,964.50) | (633,972.08) |
| நடைமுறை ஆண்டிற்கான பணிக்கொடை | | 695,882.00 | 1,008,897.50 |
| தேய்மானத்தின் திருத்தம் - நூலக புத்தகம் | | 264,352.00 | - |
| திரட்டப்பட்ட செலவுகளின் திருத்தம் | | (2,653,547.48) | (2,869,509.48) |
| மூலதன மானிய கடன் | | (206,120.63) | (296,009.91) |
| ஆண்டுக்கான வட்டி வருமானம் | | | |
| **மூலதன மாற்றத்திற்கு முன்னர் செயற்பாட்டு இலாபம்** | | **4,757,819.83** | **1,083,756.66** |
| **மூலதன மாற்றம்** | | | |
| (அதிகரிப்பு) (குறைப்பு) கிடைக்கப்பெற்ற வருமானம் | | | |
| (அதிகரிப்பு) குறைப்பு இருப்புக்கள் | | (127,194.30) | 558.34 |
| (அதிகரிப்பு) குறைப்பு வைப்புக்களும் கொடுப்பனவுகளும் | | 233,091.60 | (28,011.29) |
| (அதிகரிப்பு) குறைப்பு கிடைக்கப்பெற்ற இடர் உதவிக்கடன் | | 73,984.06 | (50,578.02) |
| (அதிகரிப்பு) குறைப்பு சில்லறை வருமதியாளர் | | (606,231.05) | 128,158.00 |
| (அதிகரிப்பு) குறைப்பு திரட்டப்பட்ட செலவுகள் | | (21,000.00) | 22,000.00 |
| **செயற்பாடுகள் மூலம் கிடைக்கும் பணம்** | | (1,385,469.84) | 1,727,917.72 |
| | | **2,925,000.30** | **2,883,801.41** |
| **செயற்பாடுகள் மூலம் கிடைக்கும் பணம்** | | | |
| பணிக்கொடை | | | |
| மூலதன பயன்பாட்டின் நிகர காசுப்பாய்ச்சல் | | | (702,440.00) |
| | | **2,925,000.30** | **2,181,361.41** |
| **முதலீட்டு நடவடிக்கைகள் மூலமான காசுப்பாய்ச்சல்** | | | |
| நிலையான சொத்துக்கொள்வனவு | | (860,340.00) | (1,468,115.80) |
| சொத்து விற்பனை மூலம் கிடைத்த தொகை | | 320,873.50 | (587,498.43) |
| வட்டி வருமானம் | | 206,120.63 | 296,009.91 |
| **காசுப்பாய்சசல்.** | | **(333,345.87)** | **(1,759,604.32)** |
| **நிதி நடவடிக்கைகள் மூலமான பணப்பாய்ச்சல்** | | | |
| பண மானியம் மீளப்பெறுதல் அரசாங்க திறைசேரிக்கு | | 1,000,000.00 | 1,700,000.00 |
| **நிதி நடவடிக்கைகள் மூலம் வெளியேறும் பணப்பாய்ச்சல்** | | **1,000,000.00** | **1,700,000.00** |
| **பணம் மற்றும் பணப்பெறுமதி ஆகியவற்றின் நிகர அதிகரிப்பு குறைப்பு** | | **3,591,654.43** | **2,121,757.09** |
| ஆண்டின் ஆரம்பத்தில் உள்ள பணம் மற்றும் பணத்திற்கு நிகரானவை | | **2,716,484.19** | **594,727.10** |
| **உடையவை** | 11 | **6,308,138.62** | **2,716,484.19** |

**இலங்கைப் பத்திரிகைப் பேரவை**
**நிதி அறிக்கைக்கான குறிப்புக்கள்**
**2020, திசெம்பர் 31 ஆந் திகதியுடன் முடிவடையும் வருடம்**

## 1. பொது

இலங்கைப் பத்திரிகைப் பேரவை 1973 ஆம் ஆண்டின் 73 ஆம் இலக்க பாராளுமன்ற சட்டத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்டது. இலங்கைப் பத்திரிகை பேரவையின் பதிவு செய்யப்பட்ட காரியாலயம் மற்றும் அதன் பிரதான சேவை புரியும் ஸ்தானம் கொழும்பு 8, பொரல்ல, காசல் வீதி, இலக்கம் 155/15 ஆம் இலக்க கட்டடத்தில் அமைந்துள்ளது.

### 1.1 இதன் பிரதான நடவடிக்கைகள் மற்றும் செயற்பாட்டு தன்மையும்

இலங்கைப் பத்திரிகைப் பேரவை எங்கள் நாட்டின் பத்திரிகை சுதந்திரத்தை பிரபல்யப்படுத்தி அதனை தேசிய அபிவிருத்திக்கான கலாசார சின்னமாக மாற்றும் பிரதான பணியைக் கொண்டுள்ளது.

### 1.2 தயாரிப்பின் அடிப்படை

நிதிநிலை அறிக்கையை தயாரிப்பதற்கான பிரதான கணக்கியல் கொள்கை கீழே தரப்பட்டுள்ளது. இந்த கொள்கைகள் மாற்றமின்றி சகல ஆண்டுகளிலும் வேறு மாற்றங்கள் செய்யப்படாதிருப்பின் சீராக சமர்ப்பிக்கப்பட்டு வருகின்றது.

இந்த நிதிநிலை அறிக்கைகள் ஸ்ரீலங்கா பொதுத் துறை கணக்கியல் தரத்திற்கேற்ப (SLPSAS) பொதுத் துறைக்கான செயற்பாடாக இலங்கை பட்டயக் கணக்காளர் அமைப்பு (ICASL) மற்றும் நிதி திட்டமிடல் அமைச்சுடன் (SLPSAS) கூட்டாக பிரசுரிக்கப்படுகின்றது. இந்த நிதி நிலை அறிக்கைகள் இலங்கை ரூபாவில் தயாரிக்கப்படுகின்றது.

### 1.3 இணக்க அறிக்கை கூட்டுக்கள்

இலங்கைப் பத்திரிகைப் பேரவையின் நிதிக் கூற்றுக்கள் அனைத்தும் இலங்கை பொதுத்துறை கணக்கியல் தர நிலைகளுக்கு அமைவாகவே தயாரிக்கப்படுகின்றன. (SLPSAS)

### 1.4 தொடர்ந்து செல்லும் எண்ணக்கரு

எதிர்காலத்தில் பேரவையை நடாத்துவதற்கு போதியளவு வளங்கள் உள்ளது என்பதற்கு பணிப்பாளர் சபை திருப்தி அடைந்துள்ளது. எண்ணக்கருவுக்கு அமைவாக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளது.

### 1.1.2 ஒப்பீட்டுத் தகவல்கள்

கடந்த ஆண்டிற்கு அமைய பேரவை இவ்வாண்டிலும் கணக்கியல் கொள்கையை தொடர்ந்தும் கடைப்பிடித்து வருகின்றது.

### 1.1.3 கணிச மற்றும் திரட்டல்

ஒவ்வொரு மூலப்பொருட்களினதும் ஒத்த தன்மை நிதிக்கூற்றில் வேறாக பிரித்துக் காட்டப்பட்டுள்ளது. ஒத்த தன்மையற்றவை நிதிக்கூற்றில் பிரித்துக்காட்டப்பட்டுள்ளது.

### 1.1.4 கணக்கியல் கொள்கையில் மாற்றம்

முன்னைய நிதி ஆண்டின் நிதிக்கொள்கைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

## 2. குறிப்பிடத்தக்க சுருக்கமான கணக்கீட்டுக் கொள்கை

கீழே குறிப்பிடப்பட்டுள்ள நிதிக்கொள்கைகள் நிதிக்கூற்றின் எல்லா காலத்திற்கும் ஏற்புடையதாகும்.

### 2.1 சொத்து ஆலை மற்றும் உபகரணங்கள்

#### 2.1.1 அங்கீகாரமும் அளவீடுகளும்

எல்லா சொத்து ஆலை மற்றும் உபகரணங்கள் நிதிக் கூற்றுக்களின் கிரயத்தில் திரட்டப்பட்ட பெறுமானத்தேய்வு மற்றும் திரட்டப்பட்ட பலவீனத்துக்கு எதிரான இழப்புக்களின் குறைந்த பெறுமதியினாலேயே பதிவு செய்யப்படும். மோட்டார் வாகனங்கள் அதன் மீள் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியில் பதிவு செய்யப்படும். மற்றும் அதன் நியாயமான பெறுமதியில் மீள் மதிப்பீடு செய்யப்பட்ட தினத்திலான பெறுமதியில் இருந்து அடுத்தடுத்து திரட்டப்பட்ட பெறுமானத்தேய்வு மற்றும் பலவீனத்துக்கு எதிரான இழப்புக்கள் குறைக்கப்பட்டே பதிவு செய்யப்படும் சொத்து ஆலை மற்றும் உபகரணங்களுக்கான மீள் கொண்டு செல்லும் பெறுமதி இழப்புக்களுக்கு எதிராக மதிப்பீடு செய்யப்படும். எவ்வாறாயின் சில நிகழ்வுகள் மற்றும் மாற்றங்களின் காரணமாக அவற்றின் கொண்டு செல்லப்படும் பெறுமதியானது மீளப்பெற முடியாது எனும் சூழ்நிலையாகும்.

#### 2.1.2 தேய்மானம்

காணி தவிர்ந்த அனைத்து சொத்து ஆலை உபகரணங்களுக்கான பெறுமானத்தேய்வு ஏற்பாடானது நேர்கோட்டு முறையில் கிரயம் அல்லது மீள் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியில் கணக்கீடு செய்யப்படும்.

| சொத்து வர்க்கம் | வருடம் |
|---|---|
| மோட்டார் வாகனம் - (10%) | 10 |
| தளபாட இணைப்புக்கள் - (20%) | 5 |
| அலுவலக நலனோம்பு உபகரணங்கள் - (20%) | 5 |
| நூலக நூல்கள் - (20%) | 5 |

ஒவ்வொரு நிதி ஆண்டிலும் எஞ்சிய சொத்துக்களின் பெறுமானம் காட்டப்பட்டிருப்பதுடன் அவசியமாயின் செம்மையாக்கப்பட்டுள்ளது. கொள்வனவின்போது வருடத்தின் தேய்விறக்கம் வழங்கப்பட்டதுடன் விற்பனையின் போது தேய்விறக்கம் செய்யப்படவில்லை.

பேரவை கொள்கையின் சொத்து பயன்பாடானது தேய்மானக் கணக்கு.

### 2.5 ஏனைய பெறுகைகள்

ஏனைய பெறுகைகள் பணமாக குறிப்பிடப்பட்டுள்ளது. டிப்ளோமா பெறுகைகள் தவிர்ந்த ஏனைய எல்லாப் பெறுகைகளும் உள்ளபடி அடிப்படையில் கணக்கிடப்பட்டுள்ளது.

### 2.6 பொறுப்புக்களும் மாற்றங்களும்

கடந்த விடயங்களில் கடமைப்பாடுகள் ஏற்படின் ஐந்தொகையில் பொறுப்புக்கள் காட்டப்படும் வெளிப்பாயச்சலின் விளைவுகளில் பொருளியல் நலன்கள் கடன்களில் எதிர்பார்க்கப்படுகின்றது. பெறுமதியால் செலுத்துகையில் நிபந்தனைகள் அல்லது ஒரு வருட ஐந்தொகையில் குறிப்பிடப்படும் ஒரு வருடத்தின் பின்னர் ஐந்தொகையில் செலுத்தப்படும் பொறுப்புக்கள் ஐந்தொகையில் நடைமுறைப் பொறுப்புக்கள் அற்றவை என்று ஏற்றுக் கொள்ளப்படும்.

கம்பனிக்கு சட்டபூர்வ அல்லது ஆக்கபூர்வ நிபந்தனைகள் ஐந்தொகையில் ஏற்பாடுகள் உணரப்பட்டு வெளிப்பாய்ச்சி பொருளியல் நலன்கள் தேவையேற்படின் செம்மையாக்கல் செய்யப்படும்.

### 2.7 ஊழியர் நலன்கள்

#### 2.7.1 தெளிவான பங்களிப்பு திட்டங்கள்

பேரவையின் அனைவரும் ஊழியர் சேமலாப நிதியத்திலும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திலும் உறுப்பினர்களாக இருப்பதுடன் ஒவ்வொருவரதும் அடிப்படை சம்பளத்திற்கு பேரவை மூலம் 15% மற்றும் 3%பங்களிப்பு செய்யப்படுகிறது.

#### 2.7.2 விளக்கம் அளிக்கப்படும் சலுகைத் திட்டங்கள்

பணிக்கொடை விளக்கம் அளிக்கப்படும் ஒரு சலுகைத் திட்டமாகும். பேரவை நடைமுறையில் உள்ள சட்ட அமைப்புக்கு ஏற்புடையதாக பணிக்கொடையை வழங்க வேண்டும். இதன் அடிப்படையில் ஒரு வருட சேவைக்கு இறுதி மாத சம்பளத்தின் 50% வழங்கப்படும் என்ற அடிப்படையில் பணிக்கொடை தயாரிக்கப்படுகின்றது. இவ்வித பணிக்கொடை கொடுப்பனவுகள் ஆண்டு இறுதியில் பேரவையின் நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்படும்.

### 2.8 நிதிநிலை செயற்திறன் அறிக்கை

#### 2.8.1 வருமான வரி அங்கீகாரம்

பொருளாதார சலுகைகள் வருமான அங்கீகாரம் கிடைக்கப்பெற்றுள்ளதுடன் கம்பனி வருமானத்திலும் கூட்டுறவு செலவுகளிலும் உள்ளடக்கப்பட்டுள்ளது. தரமான நிலையில் வருமானம் கணிக்கப்பட்டுள்ளது. வருமானத்தை அங்கீகரித்து பார்க்குமிடத்து கம்பனிக்கு கூடுதலான பொருளாதார நன்மைகள் கிடைக்கும். அத்துடன் இந்த வருமானம் செலவுக்கு ஏற்புடையதாக இருக்கும் அல்லது அதனை நியாயப்பெறுமதியின் அடிப்படையில் மதிப்பீடு செய்ய முடியும். அத்துடன் நிகர வர்த்தக கழிவுகள் மற்றும் விற்பனை வரிகளையும் கணக்கிட்டு பார்க்க முடியும்.

### 2.8.2 அரசாங்கத்தின் பங்களிப்பு

அரசாங்கத்தின் மானிய பங்களிப்பு ஐந்தொகைக்கு கிடைக்கப்பெற்ற பின்னரே நிதிநிலை அறிக்கையில் சேர்க்கப்படும். இறுதியில் அது ஐந்தொகையில் பொறுப்புக்களற்ற மற்றும் அகற்றப்பட்ட வருமானமாக கணிக்கப்படுகின்றது. ஐந்தொகையில் இந்தமானியம் செலவிடப்படும் அளவும் குறிப்பிடப்படுகிறது.

சொத்துக்கள் மற்றும் ஆலைகள் மற்றும் இயந்திர உபகரணங்களுக்கான அரசாங்க மானியம் நிறுவனத்தின் வருமானமாக கணிக்கப்படுகிறது. அது வருமாறு

மோட்டார் வாகனம் 10%

தளபாடங்கள் மற்றும் ஏனைய பொருட்கள் 20%

காரியாலய மற்றும் நலன்புரி பொருட்கள் 20%

புத்தக நூலகம் 20%

### 2.8.3 வருமான வட்டி

வட்டி முறையில் இலாபம் அல்லது நட்ட வருமானம் வட்டியில் அடையாளப்படுத்தபட்டுள்ளது.

### 2.8.4 ஏனைய வருமானங்கள்

ஏனைய வருமான அதிகரிப்பு அடிப்படையில் அடையாளம் காட்டப்பட்டுள்ளது.

### 2.8.5.1 அங்கீகரிக்கப்பட்ட செலவினம்

பேரவையின் சகல செலவுகளும் அன்றாட செலவுகளில் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் மற்றும் சொத்துப் பராமரிப்பு உபகரணங்கள் ஆகியன நிதி பெறுபேறுகளில் காட்டப்பட்டுள்ளன.

### 2.8.5.2 செலவுகளின் வகைகள்

நிதிப்பெறுபேறுகளின் கூற்றில் நியாயமாக காட்டப்பட்டுள்ளது என்பதே ஆளுநர்களின் எண்ணமாகும்.

### 2.9 நிதிப்பாய்ச்சல் கூற்று

மறைமுகமான முறையை பயன்படுத்தி நிதிப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டுள்ளது.

### 2.10 அறிக்கை காலத்தின் பின்னர் மேற்கொள்ளப்பட்ட நிகழ்வுகள்

நிதிக்கூற்று அறிக்கை சமர்ப்பிக்கும் இறுதித் திகதியில் அறிக்கையில் சாதகமான மற்றும் பாதகமான நிகழ்வுகள் ஏற்படலாம். தேவையேற்படின் அறிக்கையிடும் காலத்தின் பின்னர் நிகழ்வுகள் ஏற்படின் செம்மையாக்கல் அல்லது வெளியிடல் ஆகியன நிதிக்கூற்றில் செய்யப்பட்டுள்ளது.

இலங்கைப் பத்திரிகைப் பேரவை

நிதி அறிக்கை தொடர்பான குறிப்புக்கள்

| திசெம்பர், 31 ஆந் திகதியுடன் முடிவடையும் ஆண்டுக்கானது<br>சகல தொகையும் இலங்கை ரூபாவில் உள்ளது | 2020 | 2019 |
|---|---|---|
| **குறிப்பு - 3 அரசாங்கத்தின் கொடுப்பனவு** | **30,796,000.00** | 30,599,000.00 |
| பேரவையின் பயன்பாட்டிற்கும் பராமரிப்புக்கும் அரசாங்கம் வழங்கும் தொகை | | |
| **குறிப்பு - 4 ஏனைய வருமானம்** | | |
| அரசாங்க பங்களிப்பிலிருந்து மூலதன தேக்கம் | 2,653,547.48 | 2,577,148.42 |
| | 2,653,547.48 | 2,577,148.42 |
| **குறிப்பு - 5 புத்தக விற்பனை** | | |
| புத்தக விற்பனை | 35,450.00 | 51,700.00 |
| புத்தக விற்பனை மூலம் கிடைத்த குறைந்த வருமானம் | (50,218.44) | (160,353.67) |
| | **(14,768.44)** | **(108,653.67)** |
| **குறிப்பு - 6 வேதனம் சம்பளம் மற்றும் ஊழியர் நன்மை** | | |
| சம்பளம் மற்றும் வேதனம் | 10,984,358.52 | 9,605,348.41 |
| ஊழியர் சேமலாப நிதி கொடுப்பனவு | 1,595,233.18 | 1,308,627.98 |
| ஊழியர் நம்பிக்கை நிதிக் கொடுப்பனவு | 319,046.63 | 261,725.62 |
| மேலதிக நேர ஊதியம் மற்றும் விடுமுறை நாட்களுக்கான ஊதியம் | 535,576.32 | 895,811.30 |
| அங்கத்தவர்களுக்கான கட்டணம் | 408,000.00 | 732,000.00 |
| பணிக்கொடை | 695,882.00 | 1,008,897.50 |
| கணக்காய்வு குழுவுக்கான கட்டணம் | - | 42,000.00 |
| ஏனைய படிகள் | 479,772.00 | 491,382.00 |
| | **15,017,868.65** | **14,345,792.81** |
| **குறிப்பு - 7 விநியோகம் மற்றும் முகவர் பயன்பாடு** | | |
| காகிதாதிகள் | 139,311.93 | 664,007.92 |
| எரிபொருள் மற்றும் எண்ணெய் | 362,316.33 | 366,632.63 |
| எரிபொருளுக்கான கொடுப்பனவு | 468,120.16 | 488,390.00 |
| இயந்திர மற்றும் மின்சார உபகரணங்கள் | - | 5,080.00 |
| காரியாலயத்திற்கு தேவையானவை | 195,383.37 | 99,571.92 |
| சீருடை | 16,000.00 | 16,000.00 |
| பத்திரிகைகள் மற்றும் சஞ்சிகைகள் | 38,565.00 | 57,525.00 |
| | **1,219,696.79** | **1,697,207.47** |
| **குறிப்பு - 8 பயன்பாட்டு செலவினம்** | | |
| தொலைபேசி கட்டணங்கள் | 181,523.27 | 204,695.77 |
| தொலைபேசி கொடுப்பனவுகள் | 164,950.93 | 172,601.58 |
| தபால் கட்டணம் | 41,570.00 | 64,915.00 |
| மின்சார கட்டணம் | 532,706.40 | 635,789.25 |
| காரியாலயத்திற்கான வாடகை | 3,660,000.00 | 3,326,400.00 |
| நீர் விநியோக கட்டணம் | 81,973.01 | 105,399.40 |
| பாதுகாப்பு கட்டணங்கள் | 744,552.00 | 771,714.00 |
| கட்டணங்கள் மற்றும் வரிகள் | 68,376.00 | 137,606.70 |
| | **5,475,651.61** | **5,419,121.70** |

**இலங்கைப் பத்திரிகைப் பேரவை**

**நிதி அறிக்கை தொடர்பான குறிப்புக்கள்**

| **திசெம்பர், 31 ஆந் திகதியுடன் முடிவடையும் ஆண்டுக்கானது** | **2020** | **2019** |
|---|---|---|
| சகல தொகையும் இலங்கை ரூபாவில் உள்ளது | | |
| **குறிப்பு - 9 ஏனைய செயற்பாட்டு செலவினங்கள்** | - | |
| போக்குவரத்து கொடுப்பனவு | 1,138,978.49 | 1,150,000.00 |
| ஊழியர் போக்குவரத்து | 47,890.00 | 87,600.00 |
| அங்கத்தவர் போக்குவரத்து | 49,152.00 | 69,456.00 |
| வெளிநாட்டு பிரயாணம் | - | 745,186.76 |
| விளம்பரம் மற்றும் பிரசுரங்கள் | 281,736.90 | 394,025.45 |
| அச்சிடுதல் மற்றும் கோவைப்படுத்தல் | 50,037.50 | 171,034.72 |
| மொழிபெயர்ப்பு | 4,255.00 | 10,700.00 |
| திருத்த வேலைகள் மற்றும் பராமரிப்பு | 768,525.21 | 1,240,155.19 |
| பொழுதுபோக்கிற்கான செலவினம் | 147,431.75 | 273,286.40 |
| பங்கு எழுதப்பட்டது | 272,659.12 | - |
| காரியாலய தளபாடம் மற்றும் உபகரணங்களை அப்புறப்படுத்துதல் | 3,716.50 | 4,879.50 |
| காரியாலய நலன்புரி உபரணங்களுக்கான செலவினத்தை கழித்தல் | 9,060.00 | 4,615.91 |
| கணக்காய்வு | 700,000.00 | 529,230.00 |
| சில்லறைச் செலவுகள் | 35,000.00 | 63,180.00 |
| வங்கிக்கடன் | 4,860.00 | 19,728.95 |
| கார் காப்புறுதி மற்றும் அனுமதிப் பத்திரம் | 180,668.54 | 208,582.32 |
| சட்ட நடவடிக்கைகளுக்கான கட்டணம் | 112,600.00 | 108,264.00 |
| இணையத்தளத்திற்கான செலவீனம் | 9,000.00 | 23,300.00 |
| முறைப்பாட்டு செலவு | 15,700.00 | - |
| | **3,831,271.01** | **5,103,225.20** |

**குறிப்பு - 10 மானியங்கள் மற்றும் மாற்றுதலுக்கான செலவினம்**

| | | |
|---|---|---|
| மாகாணங்களில் தொடர்பாடல் பயிற்சி பட்டறை | 581,718.75 | 2,318,005.07 |
| டிப்ளோமா பயிற்சி வகுப்பு | 355,234.00 | 1,246,731.89 |
| சான்றிதழ் கற்கைநெறி | 143,322.00 | - |
| தொலைத்தொடர்பாடல் கலந்துரையாடல்கள் | 12,289.00 | 20,930.00 |
| பதிப்பாக்கல் மற்றும் ஆய்வு | 573,910.00 | 133,400.00 |
| கட்டுரைப்போட்டி | - | 241,073.30 |
| ஊழியர்களுக்கான பயிற்சிபட்டறை | - | 105,800.00 |
| நலன்புரி சங்கத்திற்கான முற்பணம் | - | 25,000.00 |
| ஊடகவியலாளர்களுக்கான சலுகைகள் | 802,897.77 | 150,000.00 |
| நன்கொடைகள் | 21,147.57 | - |
| | **2,490,519.09** | **4,240,940.26** |

இலங்கைப் பத்திரிகைப் பேரவை

நிதி அறிக்கை தொடர்பான குறிப்புக்கள்

| 2020, திசெம்பர் 31 ஆந் திகதியுடன் முடிவடையும் ஆண்டுக்கானது<br>சகல தொகையும் இலங்கை ரூபாவில் உள்ளது | 2020 | 2019 |
|---|---|---|
| **குறிப்பு - 11 பணம் மற்றும் அதற்கிணையானவை** | | |
| வங்கியில் உள்ள பணம் | 6,308,138.62 | 2,716,484.19 |
| | **6,308,138.62** | **2,716,484.19** |
| | | |
| **குறிப்பு - 12 பிற தற்போதைய சொத்துக்கள்** | | |
| புத்தக விற்பனை | 6,370.00 | 6,370.00 |
| செய்தித்தாள் பதிவுக்கட்டணம் | 86,000.00 | - |
| செய்தித்தாள் பதிவுக்கான தாமத கட்டணம் | 103,500.00 | - |
| சம்பளம் மற்றும் ஊதியம் | - | 1,161.70 |
| தொலைபேசி விலக்குகள் | - | 1,798.00 |
| டிப்ளோமா சான்றிதழில் திரும்ப பெறக் கூடிய வைப்பு | - | 59,346.00 |
| | **195,870.00** | **68,675.70** |
| | | |
| **குறிப்பு - 13 இருப்பு** | | - |
| புத்தகங்களின் இருப்பு | 304,728.38 | 639,061.19 |
| காகிதாகிகளின் இருப்பு | 226,112.53 | 115,184.00 |
| விற்பனை அல்லது வருவாய் அடிப்படையிலானது | **98,046.10** | 107,733.42 |
| | **628,887.01** | **861,978.61** |
| | | |
| **குறிப்பு -14 வைப்புத்தொகை மற்றும் முன்பணம்** | | |
| பாதுகாப்பு வைப்பு -காசல் வீதி கட்டடம் | 831,600.00 | 831,600.00 |
| பாதுகப்பு வைப்பு தண்ணீர் போத்தல் | 7,200.00 | 7,200.00 |
| எரிபொருள் வைப்பு | 75,000.00 | 75,000.00 |
| காப்புறுதி மற்றும் வருவாய் உரிமை கட்டணம் | 169,983.42 | 253,967.48 |
| திரும்பபெறக்கூடிய வைப்புத்தொகை | 10,000.00 | - |
| **மொத்தம்** | **1,093,783.42** | **1,167,767.48** |
| | | |
| **குறிப்பு - 15 நெருக்கடியான காலகட்டத்தில் பெறக்கூடிய கடன்** | | |
| ஆண்டின் ஆரம்பத்தில் இருப்பு | 2,214,070.70 | 2,342,228.70 |
| வருடத்தில் கொடுக்கப்பட்ட கடன்கள் | 349,566.80 | 446,601.30 |
| | **2,563,637.50** | **2,788,830.00** |
| ஆண்டில் மீளப்பெற்றுக்கொள்ளப்பட்ட கடன்கள் | 256,664.25 | (574,759.30) |
| **ஆண்டின் இறுதியில் இருப்பு** | **2,820,301.75** | **2,214,070.70** |

குறிப்பு 16 சொத்துக்கள் இயந்திர மற்றும் உபகரணங்கள்

| | வாகனங்கள் | தளபாடங்களும் பொருத்துதலும் | அலுவலக நலனோம்பு உபகரணம் | நூலக நூல்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| **விலை மதிப்பீடு** | | | | | |
| 2020, சனவரி 1 ஆந் திகதிக்கான மிகுதி | **10,541,000.00** | **2,520,771.71** | **9,093,339.58** | **295,164.66** | **22,450,275.95** |
| மறுமதிப்பீடு | - | (40,392.25) | (1,479,675.74) | | **(1,520,067.99)** |
| மேலதிகம் | - | 126,765.00 | 712,875.00 | 20,700.00 | **860,340.00** |
| நீக்கப்பட்டவை | | 78,716.50 | 207,820.00 | | **286,536.50** |
| 2020, திசெம்பர் 31 ஆந் திகதிக்கான மிகுதி | **10,541,000.00** | **2,528,427.96** | **8,118,718.84** | **315,864.66** | **21,504,011.46** |
| **திரட்டப்பட்ட தேய்மானம்** | | | | | |
| 2020, சனவரி 1 ஆந் திகதிக்கான மிகுதி | **7,533,800.00** | **1,491,519.03** | **4,369,067.83** | **190,574.35** | **13,584,961.21** |
| தொடக்க இருப்பின் மீதி | 162,000.00 | 3,272.91 | 98,779.09 | 300.00 | **264,352.00** |
| மறுமதிப்பீடு | | (989,450.00) | (2,306,085.00) | (153,689.71) | **3,454,224.71** |
| ஆண்டுக்கானது | 971,950.00 | 480,254.59 | 1,480,736.64 | 53,440.38 | **2,986,381.61** |
| நீக்கப்பட்டவை மூலம் | | **75,000.00** | **198,760.00** | | **273,760.00** |
| 2020, திசெம்பர் 31 ஆந் திகதிக்கான மிகுதி | **8,667,750.00** | **910,596.53** | **3,443,738.56** | **85,625.02** | **13,107,710.11** |
| **மதிப்பீடு** | | | | | |
| 2020, சனவரி முதலாம் திகதியன்று | **3,007,200.00** | **1,029,252.68** | **4,724,271.75** | **104,590.31** | **8,865,314.74** |
| 2020, திசெம்பர் 31 ஆந் திகதியன்று | **1,873,250.00** | **1,617,831.43** | **4,674,980.28** | **230,239.64** | **8,396,301.35** |

**இலங்கைப் பத்திரிகைப் பேரவை**

**நிதி அறிக்கை தொடர்பான குறிப்புக்கள்**

**2020, திசெம்பர் 31 ஆந் திகதியுடன் முடிவடையும் ஆண்டுக்கானது**

**சகல தொகையும் இலங்கை ரூபாவில் உள்ளது**

| | 2020 | 2019 |
|---|---|---|
| **குறிப்பு 17 முதலீட்டு சேமிப்பு கணக்கு நிதிமூலம்** | | |
| மக்கள் வங்கி கடன் நிதி | 1,511,031.73 | 1,974,390.46 |
| மக்கள் வங்கி ஆய்வு நிதி | 3,838,805.18 | 3,696,319.95 |
| | **5,349,836.91** | **5,670,710.41** |
| **குறிப்பு 18 திரட்டப்பட்ட செலவுகள்** | | |
| சாதாரண சம்பளம் | - | 20,412.00 |
| மேலதிக நேர கொடுப்பனவுகள் | 26,990.01 | 38,724.13 |
| போக்குவரத்து கொடுப்பனவுகள் | - | 400.00 |
| தொலைபேசி | 17,404.31 | 9,280.93 |
| தணிக்கை கட்டணம் | 700,000.00 | 2,043,780.00 |
| அலுவலக தேவைகள் | 37,654.04 | - |
| ஊழியர்களுக்கான நெருக்கடி நிலைக்கடன் | 3,607.50 | - |
| காகிதம் மற்றும் எழுதுபொருள்கள் | 79,078.06 | - |
| விகிதம் மற்றும் வரி | - | 137,606.70 |
| | **864,733.92** | **2,250,203.76** |
| ***குறிப்பு 19 ஊழியர்களுக்கான சலுகைகள்*** | | |
| வருடத்தின் ஆரம்பத்திலுள்ள இருப்பு | 4,098,760.50 | 3,792,303.00 |
| இவ்வாண்டில் செலுத்தப்பட்ட பணிக்கொடை கொடுப்பனவு | | (702,440.00) |
| | **4,098,760.50** | **3,089,863.00** |
| ஏற்பாடு பின்னடைவு நடைமுறையாண்டின் | 695,882.00 | 1,008,897.50 |
| **ஆண்டின் இறுதியில் எஞ்சிய தொகை** | **4,794,642.50** | **4,098,760.50** |

**குறிப்பு 20 தொடர்புடைய தரப்பினருடனான பரிவர்த்தனைகள்**

இயக்குனர் குழு, சபையின் முக்கிய நிர்வாக அதிகாரிகளாக பணியாற்றுகின்றனர். அவர்களுடன் இடம்பெற்ற பரிவர்த்தனைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

| பெயர் | தொடர்புடைநிலை | பரிவர்த்தனையின் தன்மை | மதிப்பு |
|---|---|---|---|
| கலாநிதி ரியூடர் வீரசிங்க | இயக்குநர் | பத்திரிகை பேரவையால் நடாத்தப்படும் சான்றிதழ் கற்கைநெறிக்கான ஒருங்கிணைப்பாளர் | 17,500/- |

எம்ஈடீ/சீ/எஸ்எல்பீசீ/3/20/எப்ஏ – 1 2021, மே 19 ஆந் திகதி

தலைவர்,

இலங்கை பத்திரிகைப் பேரவை.

**இலங்கை பத்திரிகைப் பேரவையின் 2020, திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பாக 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 12 ஆவது பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை பத்திரிகை பேரவையின் 2020, திசெம்பர் 31 ஆந் திகதியில் நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று உரிமை மாற்றங்கள் கூற்று, மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினையும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலமைப்பின் 154(6) உறுப்புரையின் பிரகாரம் எனது அறிக்கை உரிய காலத்தில் பராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து, பேரவையின் நிதிக் கூற்றுக்களினால் 2020, திசெம்பர் 31 ஆம் திகதியில் நிதி நிலைமையினையும் மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிச்செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) இலங்கைப் பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07**

(i) நியமத்தின் 49 ஆவது பந்தியின் பிரகாரம் ஆதனம், பொறிகள் மற்றும் உபகரணங்களின் தொகுதியொன்றை முனைபழியுள்ளதாக்கும் போது அந்த சொத்துக்களுக்கு உரிய ஆதனம் பொறிகள் மற்றும் உபகரணங்களின் வகுப்பு முதலில் முனைப்பழியுள்ளதாக்கப்பட வேண்டிய போதிலும் வீட்டு உபகரணங்கள் மற்றும் பொருத்துக்கள் வகுப்பினுள், அலுவலக மற்றும் நலன்புரி உபகரணங்கள் வகுப்பினுள், மற்றும் நூலக புத்தக வகுப்பினுள் கிரயம் ரூபா 6,957,152 ஆன தொகுதி முனைப்பழியுள்ளதாக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) நியமத்தின் 90 ஆவது பந்தியின் பிரகாரம் ரூபா 3,727,380 கிரயமுடைய ஆதனம், பொறிகள் மற்றும் உபகரணங்கள் முனைப்பழியுள்ளதாக்கப்படும் போது நிறுவனத்தினால் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் போதுமான அளவு வெளிப்படுத்துதல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

இலங்கைக் கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன் அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 இலங்கை பத்திரிகை பேரவையின் 2020 வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏனைய தகவல்கள்.**

இந்தக் கணக்காய்வு அறிக்கையின் திகதிக்கு பின்னர் எனக்கு பெற்றுத் தருவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற பேரவையின் 2020 வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள இருப்பினும், நிதிக் கூற்றுக்கள் மற்றும் அது தொடர்பான எனது கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிராத தகவல்கள், ஏனைய தகவல்கள் என்பதன் பொருள்படும் இந்த ஏனைய தகவல்களுக்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக எனது அபிப்பிராயத்தில் ஏனைய தகவல்கள் உள்ளடக்கப்பட்டிராததுடன், நான் அது தொடர்பாக எவ்விதத்திலும் சான்றுறுதிப்படுத்தல் அல்லது அபிப்பிராயமொன்றை கூறவில்லை.**

நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கணக்காய்விற்கு உரிய எனது பொறுப்பாக காணப்படுவது மேலே அடையாளங் காணப்பட்ட ஏனைய தகவல்களை பெறக் கூடியதாக இருக்கும் போது வாசிப்பு மற்றும் அவ்வாறு மேற்கொள்ளும் போது ஏனைய தகவல்கள் நிதிக்கூற்றுக்களுடன் அல்லது கணக்காய்வின் போது அல்லது வேறு வகைகளில் பெறப்பட்ட எனது அறிவிற்கெட்டியதன் பிரகாரம் போதுமான வகையில் பொருத்தவில்லையா என்பதை கவனத்தில் கொள்வதேயாகும்.

பேரவையின் 2020 வருடாந்த அறிக்கையை வாசிக்கும் போது அதில் பொருண்மையான பிழையான குறிப்பிடுதல் காணப்படுவதாக நான் முடிவுக்கு வந்தால், சரி செய்வதற்காக ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினருக்கு அந்த விடயங்கள் தொடர்பாடல் படுத்தப்பட வேண்டும். மேலும் சரிசெய்யப்படாத பிழையான குறிப்பிடுதல்கள் காணப்பட்டால் அவை அரசியலமைப்பின் 154(6) அரசியலமைப்பின் பிரகாரம் என்னால் காலக்கிரமத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் அறிக்கையில் உள்ளடக்கப்படும்.

**1.4 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்தல் மற்றும் சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும்போது, பேரவை தொடர்ந்தியங்கும் ஆற்றலினை தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாக காணப்படுவதோடு முகாமைத்துவமானது பேரவையை கலைப்பதற்கு கருதினால், அல்லது வேறு மாற்றுவழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பேரவையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பேரவையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு பேரவை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

ஒட்டுமொத்தமாக மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா

வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல் மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- **சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பேரவையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.**

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கூட்டுத்தாபனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக் களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் பேரவையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

**எனது கணக்காய்வின் போது அடையாளங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள், பிரதான உள்ளக கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக ஆளுகைக்குட்பட்ட தரப்பினருக்கு அறியத்தருகின்றேன்.**

## 2. ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் சம்பந்தமாக விஷேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.1.1. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 12(அ) பிரிவில் குறிப்பிட்டுள்ள தேவைப்பாட்டின் பிரகாரம் கணக்காய்வுக்கான அவசியமான அனைத்து தகவல்கள் மற்றும் தெளிவுபடுத்தல்கள் என்னால் பெற்றுக் கொள்ளப்பட்டதுடன் எனது பரீசீலனையின் போது காணப்பட்டதன் பிரகாரம் முறையான நிதி அறிக்கைப் பேரவை பேணப்பட்டிருந்தது.

2.1.2 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(i)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிட்டுள்ள தேவைப்பாட்டின் பிரகாரம் பேரவையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய வருடத்துடன் ஒத்திருந்தது.

2.1.3 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(i)(ஈ)(iv)பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டின் பிரகாரம் முன்னைய வருடத்திலே என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

2.2 பின்பற்றப்படுகின்ற நடைமுறைகள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட சான்றுகளின் அடிப்படையில் மற்றும் போதுமான விடயங்களுக்குள் வரையறுக்கப்படுவதன் மூலம் பின்வரும் வெளிப்படுத்துதல்களை மேற்கொள்ளும் அளவிற்கு எதுவும் எனது அவதானத்திற்கு உட்பட்டிருக்கவில்லை.

2.2.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 12(ஈ) பிரிவின் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டின் பிரகாரம் பேரவையின் கட்டுப்பாட்டுப் பேரவையின் யாதேனும் உறுப்பினருக்கு பேரவையின் சம்பந்தமாக யாதேனும் ஒப்பந்தமொன்றின் சம்பந்தமாக நேரடியாக அல்லது வேறுவழியில் சாதாரண வியாபார நிலைமைக்கு அப்பால் தொடர்பொன்று காணப்படுவதாக

2.2.2 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 12(ஊ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டின் பிரகாரம் பின்வரும் அவதானம் தவிர்ந்த யாதேனும் உரிய எழுத்து மூல சட்டத்திற்கு அல்லது பேரவையின் கட்டுப்பாட்டு பேரவையினால் வெளியிடப்பட்ட வேறு பொது அல்லது விஷேட ஏற்பாடுகளுக்கு இணங்காமல் செயற்பட்டிருப்பதாக

| | சட்டங்கள், விதிகள்/ ஏற்பாடுகளுடனான தொடர்பு | அவதானிப்பு |
|---|---|---|
| (அ) | இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 133 மற்றும் 134 | பேரவையினுள் உள்ளக கணக்காய்வுப் பிரிவொன்று நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லையென்பதுடன் பேரவையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினருக்குள் உள்ளக கணக்காய்வாளர் பதவியொன்று உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவை 5.4.10 | பேரவையினால் தற்போதைய தொடர்பு ஊடக மற்றும் மக்களின் உரிமைகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட செவிமடுத்தல் ஆய்வை மேற்கொள்வதற்காக தனியார் நிறுவனமொன்றுடன் ரூபா 1,830,000 வுக்கு ஒப்பந்தமொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தாலும் ஒப்பந்தத் தொகையில் நூற்றிற்கு 10க்கு குறைவில்லாத செயலாற்றல் பாதுகாப்புறுதியொன்றை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2010, மே 14 ஆந் திகதிய சனாதிபதி செயலக கடித இலக்கம் சீஏ/1/17/1 இன் 1 ஆம் பந்தி மற்றும் 2012 யூலை 10 ஆந் திகதிய பொது முயற்சிகள் குழுவின் 7 ஆவது இலக்கக் கட்டளை | இந்தக் கட்டளையின் பிரகாரம் பேரவை அரச கட்டிடமொன்றில் மேற்கொள்ளல் வேண்டுமெனினும் பேரவையின் ஆரம்பம் முதல் 21 வருட காலங்கலாக வாடகைக்கு பெற்றுக்கொண்ட தனியார் கட்டிடங்களில் தனது செயற்பாட்டை மேற்கொள்ளப்பட்டு வந்திருந்ததுடன் அதற்காக 2010 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை மாத்திரம் கட்டிட வாடகையாக ரூபா 26,108,800 செலவிடப்பட்டிருந்தது. |

2.2.3 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 12(எ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டின் பிரகாரம் பின்வரும் அவதானிப்புக்கள் தவிர்ந்த பேரவையின் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் இணங்காதாக நடவடிக்கை மேற்கொண்டிருப்பதாக

| | அதிகாரங்கள், தொழிற்பாடுகள், கடமைகள் | அவதானிப்பு |
|---|---|---|
| (அ) | பத்திரிகை பேரவை சட்டத்தின் 30 ஆவது பிரிவின் பிரகாரம் விதிகள் மற்றும் கட்டளை செயற்படுத்தல் | பதிவு செய்யப்படாது சந்தைக்கு விநியோகிக்கப்பட்ட பத்திரிகைகள் தொடர்பாக தேவையான விதிகள் மற்றும் கட்டளை செயற்படுத்தலுக்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | பத்திரிகை பேரவை சட்டத்தின் 09 ஆவது பிரிவின் பிரகாரம் பத்திரிகைகளுக்கு மற்றும் பத்திரிகை ஆசிரியர்கள் ஆகியோருக்கு எதிராக பேரவையினால் செயற்படுத்தல். | மீளாய்வாண்டிற்குள் செய்திப் பத்திரிகைகளுக்கு எதிராக பொதுமக்களிடமிருந்து வெவ்வேறு நிறுவனங்களிடமிருந்தும் 71 முறைப்பாடுகள் மற்றும் 2019 ஆம் ஆண்டிலே தீர்வு செய்யப்படாமல் முன் கொண்டு வரப்பட்ட 62 முறைப்பாடுகள் உள்ளடங்கலாக மொத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை 133 ஆக காணப்பட்டதுடன் அதில் 69 முறைப்பாடுகள் மீளாய்வாண்டின் இறுதி வரை தீர்வு செய்யப்படாமல் காணப்பட்டிருந்தது. |
| (இ) | பத்திரிகை பேரவை சட்டத்தின் 18 ஆவது பிரிவின் பிரகாரம் தண்டப் பணங்கள் ஒன்றிணைந்த நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டியதாக | மீளாய்வாண்டிற்குள் பத்திரிகைகள் பதிவு செய்தல் தாமதக் கட்டணங்களாக அறவிடப்பட்ட ரூபா 59,100 தொகையை ஒன்றினைந்த நிதியத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. |

2.2.4 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 12(ஏ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டின் பிரகாரம் பேரவையின் வளத்தை சிக்கனமாக வினைத்திறனாக மற்றும் ஆக்கபூர்வமாக கால வரையறைக்குள் உரிய சட்டங்கள், விதிகளுக்கு இணங்க பெறுகைக்குட்படுத்தி பாவனைக்குட்படுத்தபட்டிராமை.

### 2.3 வேறு விடயங்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) செயல் நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வேலைகள் நிறைவேற்றுதல் சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த 08 வேலைத்திட்டங்களை செயற்படுத்துவதற்கு பேரவை தவறியிருந்தது.

(ii) மீளாய்வாண்டிற்குள் பதிவு செய்யப்பட வேண்டிய பத்திரிகைகளின் எண்ணிக்கை 250 உம் மற்றும் மதிப்பிடப்பட்ட பத்திரிகைகளின் பதிவு செய்யப்பட்ட வருமானம் ரூபா 500,000 ஆக இருந்ததுடன் உண்மையாக பதிவு செய்யப்பட்ட பத்திரிகைகளின் எண்ணிக்கை 172 ஆக காணப்பட்டதுடன் 78 பத்திரிகைகளுக்காக பதிவு செய்யப்பட்ட வருமானத்தை இணங்கான வேண்டியிருப்பினும் 15 பத்திரிகைகளுக்காக ரூபா 86,000 மாத்திரம் வருமானமாக இணங்காணப்பட்டிருந்ததுடன் எஞ்சிய 63 பத்திரிகைகளுக்கான வருமானத்தை இணங்கண்டிருக்கவில்லை.

(iii) ஒரு வேலைத் திட்டத்திற்கு ரூபா 50,000 என்ற அடிப்படையில் செய்தியாளர்களுக்காக 10 நலன்புரி வேலைத்திட்டங்களை மேற்கொள்வதற்கு பேரவை திட்டங்களை தீட்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டிற்குள் ஒரு வேலைத்திட்டம் மாத்திரம் இடம் பெற்றிருந்ததுடன் அதற்காக ரூபா 802,897 செலவிடப்பட்டிருந்ததுடன் பேரவையின் முன்னேற்ற அறிக்கையின் நிதிச் செயலாற்றலாக நூற்றிற்கு 140 காட்டப்பட்டிருந்தாலும் அது பாதீட்டுப் பெறுமானத்தை விஞ்சியிருந்தது.

(ஆ) பேரவையினால் முறையே 1993, நவெம்பர் 05 ஆந் திகதி மற்றும் 2009, செத்தெம்பர் 07 ஆந் திகதிகளில் ஆரம்பிக்கப்பட்ட ஆய்வு நிதியம் மற்றும் கடன் நிதியம் என்பவற்றிற்காக இரண்டு வங்கிக் கணக்குகள் பராமரிக்கப்பட்டு வருவதுடன் மீளாய்வாண்டின் இறுதியில் அக் கணக்குகளின் மீதி முறையே ரூபா 3,838,805 மற்றும் ரூபா 1,511,031 ஆக இருந்தது. இலக்கம் எப்ஜஎன்/பீஈஎன்/168 மற்றும் 2017, திசெம்பர் 19 ஆந் திகதிய பேரவையின் தலைவரின் கடிதத்தின் மூலம் இந் நிதியக் கணக்குகளை பராமரிப்பதற்கு பொதுப் பாதீட்டு திணைக்கள பணிப்பாளர் நாயகத்தினது அனுமதிக்காக கோரப்பட்டிருந்தபோதிலும் 2021, மாச்சு 10 ஆந் திகதி வரையிலும் அந்த அனுமதி கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

(இ) பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானங்களுக்கிடையே நூற்றிற்கு 5 இல் இருந்து நூற்றிற்கு 67 வரையானதும் பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான செலவினங்களுக்கிடையே நூற்றிற்கு 5 இல் இருந்து நூற்றிற்கு 100 வரையானதுமான முரண்கள் அவதானிக்கபட்டமையால் பாதீட்டு பதிவேட்டை ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) இலங்கை பத்திரிகை பேரவை மற்றும் பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு தொடர்பான ஒப்பீட்டு ஆய்வொன்றை மேற்கொண்டு ஆராய்ச்சி அறிக்கையொன்றை சமர்ப்பிப்பதற்காக ஒப்பந்தமொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்காக ரூபா 200,000 தொகை முற்பணமாக 2015, நவெம்பர் 24 இல் களணி பல்கலைக்கழகத்தின் வெகுசன ஊடகத்துறை பிரிவிற்கு செலுத்தப்பட்டிருந்ததுடன் அக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டு ஒரு மாத காலத்திற்குள் பேரவைக்கு பூரண அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. போதிலும் 2021, மாச்சு 10 ஆந் திகதி வரையிலும் அந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) ஆதனம், பொறிகள் மற்றும் உபகரணங்களை மீள் மதிப்பீட்டினை மேற்கொள்ளும் போது நிறுவனத்தினால் பதவியணி உறுப்பினர்கள் 5 பேர்களை உள்ளடக்கிய குழுவொன்று இதற்காக பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் மதிப்பிடுதல் தொடர்பாக இக் குழுவின் உறுப்பினர்களின் அறிவு மட்டம் மற்றும் தகைமைகள் தொடர்பாக கணக்காய்வின் போது திருப்தியடைய முடியாதிருந்ததுடன் மீள் மதிப்பீட்டின் மூலம் உருவாக்கப்பட்ட மீள் மதிப்பீட்டுப் பெறுமதி தொடர்பாக கணக்காய்வின் போது பிரச்சினைக் குறியதாகவுள்ளது.

(ஊ) 1981 ஒற்றோபர் 14 இல் 162/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானக் குறிப்பின் படி தினசரி பிரசுரிக்கப்படும் பத்திரிகைகள் தொடர்பிலான பத்திரிகைகள் நெறிமுறைக் கோவையுடன் இணங்கியொழுகுவதனை புலனாய்வு செய்வதற்கான முறைமையொன்று காணப்படுகின்றதெனினும் பிரசுரிக்கப்பட்ட பத்திரிகைகளுடன் ஒப்பிடும் போது ஒரு வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையிலான புலனாய்வு அறிக்கைகளே சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அப்புலனாய்வு அறிக்கைகள் தொடர்பாகவும் ஒழுக்க நெறிகளை பின்பற்றுதல் தொடர்பாக தேவையான மதிப்பீடுகள் மேற்கொள்வது தொடர்பாக பேரவை போதியளவு கவனத்தினை செலுத்தியிருக்கவில்லை.

டபிள்யூ. பீ. சீ. விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி